**இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு திட்டம் - II (i-வீதி - II) - 2019**

இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு திட்டம் - II (i-வீதி - II) இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 நொவம்பர் 22 ஆந் திகதி 3579–எஸ்ஆர்ஐ மற்றும் 3580–எஸ்ஆர்ஐ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரிவு 4.03 இன் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகளி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கிராமப்புர சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையிலான 3400 கி.மீ வீதிகளின் அடயக்கூடிய தன்மையினை அதிகரித்தல் கருத்திட்டத்தின் குறிக்கோள்களாகும். 340 கி.மீ தேசிய வீதிகளின் போக்குவரத்து திறனை அதிகரிப்பது நீண்டகால தாக்கமொன்றாகும். கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் சிவில் வேலைகள், ஆலோசனை வேலைகள், செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு, பயன்பாட்டு மாற்றம், வரிகள், வட்டி மற்றும் ஒப்படைப்பு கட்டணங்கள் எனப் பெயரிடப்படும் 05 கூறுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 184,382 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1,084.60 மில்லியனானதுடன் அதில் ரூபா 153,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 900 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 31,382 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2018 ஜூலை 20 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2028 ஜூலை 19 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தய-ாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 | வேறான ஒரு கொடுப்பனவு உருப்படி செயலாற்றல் உத்தரவாதங்களை வழங்குவதற்கான கிரயங்களை மேற்கொள்ள ஒப்பந்ததாரர்களை அனுமதிப்பதனூடாக வீதி புனரமைப்பு வேலைகள் மீதான அளவைப்பட்டியலில் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, மொத்தமாக ரூபா 85.64 மில்லியன் ஒப்பந்ததாரர்களினால் பெறப்பட்ட செயலாற்றல் பாதுகாப்பு பத்திரங்களின் கிரயத்தினை மீளப்பெற ஊவா மாகாண ஒப்பந்ததாரரிகளிற்கு மேலதிகமாக செலுத்தியிருந்தது. | ஒப்பந்ததாரர்களிற்கு தகாத நன்மைகள். | இப்பெறுமதி ஒரு வெறான உருப்படியாக பீஓகியுவ் வில் வழங்கப்படாவிடில், ஏலதாரர் ஏனைய பீஓகியுவ் உருப்படிகளிற்குள் அக்கிரயத்தை உள்ளடக்கக்கூடும். ஒப்பந்தமானது மேற்கோள் ஒப்பந்தவிலையின் அடிப்படையில் வழங்கப்பட்டது (கணிசமாக குறைந்த மதிப்பீட்டு ஒப்பந்தவிலை), இத்தொகையை ஒரு நட்டமாக கருத முடியாது. இருப்பினும், பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 கிழக்கு, வடக்கு மற்றும் மேல்மாகாணங்களில் பொதிகளில் திருத்தப்பட்டுள்ளது. அதன்படி, பீஓகியுவ் விலுள்ள கொடுப்பனவு உருப்படி நீக்கப்பட்டுள்ளது. | அளவைப்பட்டியலின் மிளாய்வானது ஏல ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுனர் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தத்தின் குறித்த நிபந்தனையின் உபபிரிவு 14.6 | ஒப்பந்த தொகையில் 1.5 சதவீதத்திற்கு குறைந்த இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தினை வழங்க பொறியியலாளர்கள் | இடைக்கால கொடுப்பனவுகளின் மதிப்பீடு மீதான கிரயத்தின் அதிகரிப்பு. | ஒப்பந்த நிபந்தனையிலுள்ள ஏற்பாடுகள் முக்கியம் இல்லை என்றால் காசுப்பாய்ச்சலினை மேம்படுத்த குறித்த (1.5) | கிரயங்கள், நேரம் மற்றும் ஒப்பந்ததாரர்களிற்கான தேவையற்ற நன்மைகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கட்டாயப்படுத்தப்படமாட்டார்கள். இருப்பினும், ஊவா மாகாணத்திலுள்ள 130 நிகழ்வுகள் 2019 திசெம்பர் 31 வரை தேவைப்பாட்டு மட்டத்திற்கு கீழான இடைக்கால கொடுப்பனவு பட்டியல்களின் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | குறைந்தபட்சத்திற்கு கீழான கொடுப்பனவுகளை அனுமதிக்க வேலைதாரரினால் ஒரு தீர்மானம் காணப்பட்டது. இத் தீர்மானமானது செய்யப்படாத கொடுப்பனவுகள் வேலைகளின் செயலாற்றலை மேலும் பாதிக்கலாம் எனும் உன்மையின் அடிப்படையில் செய்யப்பட்டதாகும். இருப்பினும், விசேட சூழ்நிலைகளின் கீழானவற்றை தவிர்க்க ஒப்பந்த உபபிரிவுகளை கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | போன்றவற்றை குறைப்பதற்காக ஒப்பந்த நிபந்தனையில் ஒப்புதலளிக்கப்பட்ட விதி முறைகளுடன் இனைக்க வேண்டிய தேவை கானப்படுகின்றது. |

**3. பௌதீக முன்னேற்றம்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| இல | கூறுகள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | தேசிய வீதிகளின் புனர்நிர்மானம். | ஆரம்ப திட்டங்களின் பிரகாரம், தேசிய வீதிகளின் 340 கி.மீ இன் வீதி புனரமைப்பு வேலைகள் மற்றும் வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகாணங்களிலுள்ள கிராமிய வீதிகளின் 3,400 கி.மீ கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதிக்குள் புனரமைக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், அப்புனரமைப்பு வேலைகளில், ஊவா மாகாணத்திலுள்ள கிராமிய வீதிகளின் 1,041.96 கிமீ, கிழக்கு மாகாணத்திலுள்ள கிராமிய வீதிகளின் 845.57 கி.மீ மற்றும் வட மாகாணத்திலுள்ள கிராமிய வீதிகளின் 1,036.26 கி.மீ கள் என்பன மாத்திரமே 2019 | நிர்மான வேலைகளை ஆரம்பிப்பதில் தாமதம் காரணமாக கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | 2020 ஜுன் 15 இல் உள்ளவாறு, மொத்தமாக 3,629.25 கி.மீ வீதிகள் மேல்மாகாணத்திலுள்ள 700 கி.மீ வீதிகள் உள்ளடங்களாக தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் 800 வீதிகள் மேல் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் ஏல நேரத்தின் போது 100 கி.மீ அவர்கள் ஏற்கனவே வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் புனரமைத்ததனால் கைவிடப்பட்டிருந்தது. | சரியான திட்டத்துடன் உடன்படவும் கிராமிய வீதிகளுடன் இணைந்த தேசிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளை பூர்த்தி செய்யவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையளிக்கப்பட்டிருந்தது. அதன்படி, கிராமிய வீதிகளின் மீதமுள்ள 476.21 கிமீகளின் புனரமைப்பு வேலைகள் மற்றும் எவ்வித தேசிய வீதிகளுமே 2019 திசெம்பர் 31 வரை கூட கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | | மேலதிக வீதிகளின் மிகுதியை ஈடு செய்ய அடையாளப்படுத்தப்படும். | |
| (ஆ) கிராமிய வீதிகளின் புனரமைப்பு. | (i) ஊவா மாகாணத்திலுள்ள கிராமிய வீதிகளின் வழங்கப்பட்ட 1041.96 கி.மீ களின் புனரமைப்பு வேலைகள், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 210.1 கி.மீ மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. மேலும் பதுளை மாவட்டத்திலுள்ள 07 ஒப்பந்த பொதிகள் மற்றும் மொனராகலை மாவட்டத்தினுள் 02 ஒப்பந்தப் பொதிகள் என்பவற்றின் நிர்மான செயலாற்றல் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளிற்கு மிகவும் பின்னாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இம் மந்தகதியான பௌதீக செயலாற்றலின் பெறுபேறாக, ஒப்பந்ததாரர்கள் பூர்த்தியாக்கல் திகதிக்கு முன்னர் நிர்மான வேலைகளை பூர்த்தி செய்ய முடியாமல் போகக்கூடும். | நிர்மான வேலைகளை பூர்த்தியாக்கலில் தாமதம் காரணமாக கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | ஊவா மாகாணத்தின் பொதிகளின் நிர்மான வேலைகள் 2018 ஜூலை 20 இல் ஆரம்பிக்கப்பட்டது. ஊவா மாகாணத்தில் வழங்கப்பட்ட புனரமைப்பு வேலைகளில் 210.1 கி.மீ கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் பூர்த்திசெய்யப்பட்ட நீளம் 2020 மே 31 இல் உள்ளவாறு 287.22 கி.மீ ஆகும். ஒன்பது பொதிகளில் மந்தகரமான செயலாற்றல் அவதானிக்கப்பட்டது. | இலக்கிடப்பட்ட காலப்பகுதிக்குள் குறிக்கோள்களை அடைவதற்கும் நிர்மான வேலைகளை விரைவுபடுத்தவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) கிழக்கு மாகாணத்திலுள்ள கிராமிய வீதிகளின் வழங்கப்பட்ட 845.57 கி.மீ களின் புனரமைப்பு வேலைகளில், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 9.8 கி.மீ மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | நிர்மான வேலைகளை பூர்த்தியாக்கலில் தாமதம் காரணமாக கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | நிர்மானம் 2019 திசெம்பர் 25 இல் ஆரம்பிக்கப்பட்டது. பௌதீக வேலைகளை ஆரம்பிக்க முன்னர், அதிகளவான ஆரம்ப கட்ட வேலைகள் இறுதியாக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | இலக்கிடப்பட்ட காலப்பகுதிக்குள் குறிக்கோள்களை அடைவதற்கும் நிர்மான வேலைகளை விரைவுபடுத்தவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

அதே பொல் பௌதீக வேலைகளின் பூர்த்தியாக்கல் இயலளவு 2019 திசெம்பர் இறுதிவரை குறைவாக இருந்தது. அதுதவிர, பருவ மழை காலங்கள் 2019 நவம்பர் இல் ஆரம்பித்ததுடன் 2020 சனவரி முடிவுவரை தொடர்ந்திருந்தது. அனைத்து ஒப்பந்ததாரர்களும் திட்டமிட்ட படி முழுமையாக வேலை ஆரம்பித்திருந்தனர். இருப்பினும், அவர்கள் திசெம்பர் 31 இல் இலக்கிடப்பட்ட செயலாற்றலை அடய முடியாமலிருந்தது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | விசேட ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், அளவைப்பட்டியலின் கீழ் பெறுகை செய்யப்பட்ட உபகரணங்களின் உரிமைத்துவம் நிகழ்ச்சித்திட்ட முடிவில் ஒப்பந்ததாரரிற்கு மாற்றப்படல் வேண்டும். இருப்பினும், உபகரணம் மற்றும் ஆய்வுகூட உபகரணம் போன்றவற்றிற்கான ரூபா 98.42 மில்லியன் மற்றும் 178.95 மில்லியன் தொகை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் மீதான கிரயத்தினை எதிர்கொள்ள மொத்த தொகை | ஒப்பந்ததாரரிற்கு தேவையற்ற நன்மைகள் செய்யப்பட்டன. | சோத்துக்களின் உரிமைத்துவம் ஒப்பந்த காலப்பகுதியின் இறுதியில் ஒப்பந்ததாரரிற்கு கழைய நிலமைக்கு கொண்டுவரும் போதுஇ ஒப்பந்ததாரர்கள் உரிய சொத்துக்களின் எஞ்சிய பெறுமதிகளை கணக்கிற்கு எடுத்ததுடன் குறைந்த கூறுபெறுமதியை எதிர்பார்க்க முடியும். எனவே செயற்திட்டத்திற்கு எவ்வித பாதக விளைவுகளும் இருக்கவில்லை. | ஒரு பொது நடைமுறையாக, உரிய சொத்துக்கள் தொழில் தாரரினால் தக்கவைக்கப்படுகின்றது. எனவே இந்நிகழ்ச்சித்திட்டததின் கீழான ஒப்பந்தததின் கிரயம் ஏனைய கடன்வழங்குனரால் நிதியளிக்கப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 44.23 மில்லியன் 2019 திசெம்பர் 31 வரைக்குமான ஆய்வு கூட உபகரணத்தின் பராமரிப்பிற்காக செய்யப்பட்டிருந்தது. தேவையற்ற நன்மை ஒன்று நிகழ்ச்சித்திட்ட இறுதியில் உபகரணம் ஒப்பந்ததாரரினால் உரிமை கொள்வதாக ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்டிருந்தது. | | | செயற்திட்டங்களினால் வழங்கப்பட்ட ஏனைய ஒப்பந்த பொதிகளின் கிரயங்களுடன் ஒப்பிடும் போது, குறைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 28.7 மில்லியன் உருப்படிகளின் பிழையான விளக்கங்களை கொடுப்பதனூடாக பொறியியலாளர் மதிப்பீடுகள், ஏல ஆவணங்கள் மற்றும் அளவைப்பட்டியல் என்பவற்றிற்கிடையே விகித முறன்பாடு ஏற்பட்டிருந்தமை காரணமாக ஒப்பந்தப்பொதிகள் பீஏ04 மற்றும் பீஏ05 உடன் தொடர்புபட்டு 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. பெறுகைக் குழு அல்லது தொழிநுட்ப மதிப்பீட்டு குழு அரச பெறுகை வழிகாட்டியின் உபபிரிவு 2.4 மற்றும் 2.6 வரிசையிலுள்ள அவ் ஆவணங்கள் முறையாக மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. | பலவீனமான ஒப்பந்த நிர்வாகம் காரணமாக நட்டங்களிற்கான சாத்தியம். | கூறுவிலைகள் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டன;<br>1. எண்கணித ரீதியான திருத்தங்கள்.<br>2. சரிசெய்யப்படாத கூறுவிலைக்கான உயர்விகித உருப்படிகள் மற்றும் குறை மதிப்பிடப்பட்ட வேலை உருப்படிகள்.<br>3. அசாதாரணமாக குறைந்த கூறுவிலை.<br>டிஈசி (TEC) ஆனது மேலே குறிப்பிடப்பட்டவாறு வழகாட்டிகளிற்கு ஏற்ப கூறு விலைகளை மதிப்பிட்டதை மதிப்பீட்டு வழகாட்டிகள் செயலாற்றல் பாதுகாப்பினை அதிகரிப்பதனூடாக சமநிலையற்ற கூறுவிலைகளின் ஆபத்தினை குறைப்பதங்கான ஒரு ஏற்பாட்டினை வழங்குகின்றது. இது உருப்படி ஒரு முன்கூட்டடிய வேலை உருப்படியாக இல்லாததாக கருதப்படாமல் இருந்தது. ஒப்பந்தம் பீஏ4 மற்றும் பீஏ5 இன் மதிப்பிடப்பட்ட கூறுவிலை நியாயமானதாக அடயாளம் காணப்பட்டது. எஸ்சிஎபிசி மற்றும் டிஈசி ஆனது ஏடிபி இன் மதிப்பீட்டு வழகாட்டலின் ஏற்பாட்டிற்குள்ளே கூறுவிலையை மதிப்பிட்டிருந்தது. | நட்டங்களை மீட்க நிகழ்ச்சித்திட்டத்தினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ஆலோசகர் சேவைக்கான உப்பந்த உடன்படிக்கையின் உபபிரிவு 54 இற்கு முறனாக, ரூபா 1.19 மில்லியன் சர்வதேச உத்தியோகத்தர்களிற்கு (குழுத்தலைவர்) தங்குமறை வழங்குவதற்காக 2018 செப்டம்பர் தொடக்கம் 2019 திசெம்பர் வரை ஒப்பந்தப் பொதி பீஏ6 இனூடாக செலுத்தப்பட்டிருந்தது. | பலவீனமான ஒப்பந்த நிர்வாகம் காரணமாக நட்டங்களிற்கான சாத்தியம். | ஆலோசகர் சர்வதேச உத்தியோகத்தர்களிற்கான ஒரு டியமிற்கான நீண்டகாலம் தொடர்பாக திட்டத்தினை சமர்ப்பிக்க முன்னர் விளக்கத்தினை கோரினர். தங்குமிடவசதி மற்றும் போக்குவரத்து என்பன அவர்களது விளக்கிற்கு பதில் வழங்கும் முகமாக, சிவில் வேலை ஒப்பந்தங்களினூடாக குழு தலைவரிற்கு வழங்கப்பட்டிருந்தது என தொழில் வழங்குனர் அனைத்து குறுகிய பட்டியலிடப்பட்ட ஆலோசகர்களிற்கு அறிவித்திருந்தார. அதன்படி, ஆலோசகர்கள் அவர்களது வேண்டுகோளை சமர்ப்பித்திருந்தனர். எனவே, ரூபா 1,199,524 கொடுப்பனவு ஒப்பந்தத்தின் பிரகாரம் 2018 செப்தம்பர் தொடக்கம் 2019 திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | அனைத்து தரப்பினர்களும் தீர்மானத்திற்கு உடன்பட்டால் ஆலோசகர் உடன்படிக்கையை திருத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 வெளிக்கள விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்.**

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| ------ | -------------------------------- | ------------ | --------------------------------- | ------------------ |
| (அ) | ஒப்பந்தத்தின் குறித்த நிபந்தனையின் உபபிரிவு 103.1 இன் பிரகாரம், ஒப்பந்ததாரர் போக்குவரத்து மற்றும் மூன்றாம் தரப்பினர்களின் பாதுகாப்பிற்கு தேவையான அளவீடுகளை எடுக்க வேண்டும். ரூபா 7,545,000 மற்றும் 2,050,600 என்ற ஒரு தொகை பீஏ02 மற்றும் பீஏ06 பொதிகளுடன் தொடர்புபட்ட உரிய உருப்படிகளிற்காக ஒப்பந்ததாரர்களிற்கு செய்யப்பட்டிருப்பினும், மேற்கூறிய பாதுகாப்பு அளவீடுகள் ஒப்பந்ததாரரினாலோ மூன்றாம் நபரினாலோ வேலைத்தளத்தில் முறையாக பின்பற்றப்பட்டிறாமை 2020 பெப்ரவரி 25 இலான | வீதிகளின் போக்குவரத்து பராமரிப்பிற்காக செலவு ஏற்பட்டிருப்பினும் பொது மக்கள் மற்றும் செயற்திட்ட ஊழியர்களின் பாதுகாப்பின்மை ஏற்பட சாத்தியம். | ஒப்பந்ததாரர் போக்குவரத்து பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு உருப்படிகளிற்கான ஒன்றினைந்த கள ஆய்வு அறிக்கையினை பெறுவதனூடாக செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, கொடுப்பனவு மாதாந்தம் செய்யப்பட்ட வேலைகளின் தொகைக்கு செய்யப்படுகின்றது. ஒப்பந்ததாரர் திருப்பிகரமான வேலையை செய்திருந்தால், முழு கொடுப்பனவும் உறுதிப்படுத்தப்பட்டு செலுத்தப்படுகின்றது. வேலைத்தளத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏதாவது | உரிய வீதிகளின் போக்குவரத்து பாதுகாப்பினை பராமரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| வெளிக்கல விஜயத்தின் போது அவதானிக்கப்பட்டது. அது பொது மக்கள் மற்றும் செயற்திட்ட அலுவலகர்களை பாதுகாப்பற்றதாக மாற்றலாம். | | குறைபாடுகள் கானப்படின், கொடுப்பனவுகள் கொடுப்பனவு உருப்படிகளிற்காக விகிதாசார அடிப்படையில் கழிக்கப்படும். இது சரிசெய்யப்படும் வரை இது தொடர்பான இணக்கமில்லா அறிவுறுத்தல்கள் நேரத்திற்கு நேரம் பொறியியலாளர்கள் வழங்கிளர். | |
| (ஆ) ஒப்பந்ததாரர்களின் நிபந்தனைகளின் விசேட குறிப்புகளின் உப பிரிவு 103.2.2 இன் பிரகாரம், ஒப்பந்ததாரர் வீதிகள் வாகனம் செல்லும் நல்ல நிலையில் பராமரிக்க வீதிகளின் வழக்கமான பராமரிப்பு வேலைகளை ஆரம்பிக்க வேண்டும். இருப்பினும், 2020 பெப்ரவரி 25 இல் செய்யப்பட்ட பௌதீக வெளிக்கல ஆய்வின் அடிப்படையில், மேற்கூறிய பராமரிப்பு வேலைகள் ஒப்பந்ததாரரரினால் செய்திருக்கப்படாததுடன் ரூபா 4,685,800 ரூபா 9,046,383 மற்றும் ரூபா 3,162,635 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தப்பொதிகள் பீஏ02, பீஏ06 மற்றும் பீஏ05 உடன் தொடர்புபட்டு செலுத்தப்பட்டிருந்தமையை அது வெளிப்படுத்தியது. இந்நிலமை மேலும் சிரமத்தினையும் பொது மக்களிற்கான விபத்தினையும் எற்படுத்தும். | வீதிகளின் வழக்கமான பராமரிப்பிற்காக செலவுகள் ஏற்பட்டிருப்பினும், மேலும் சிரமம் மற்றும் பொது மக்களிற்கான விபத்தினையும் ஏற்படுத்தும் சாத்தியம். | பொறியியலாளர்களின் சிபாரிசின் பிரகாரம், கொடுபனவுகள் பராமரிப்பு வேலைகளின் பூர்த்தியாக்கப்பட்ட நீளத்தின் அடிப்படையில் செய்யப்பட்டிருந்தது. இதனை சரி செய்ய இது தொடர்பான இணக்கமின்மை அறிக்கை நேரத்திற்கு நேரம் பொறியியலாளர்கள் வழங்கினர். | வழக்கமான பராமரிப்பு வேலைகளை சுமூகமாக செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 புறநடையான கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ------------------------------- | ------------ | --------------------- | ---------------------- |
| ரூபா 206.03 மில்லியன் தொகையான ஒப்படைப்பு கட்டணங்கள் கடனின் மீளப்பெறப்படாத வருமானங்கள் மீது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கும் முகவரிற்கு சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்தது. | ஒதுக்கங்கள் உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்த முடியாமல் போகக்கூடும். | பயன்படுத்தப்பட்ட மீதிகள் மீதான ஒப்படைப்பு கட்டணங்கள் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடனின் நடைமுறைப்படுத்தல் திகதியின் பின்னரே பொருந்தும். இது போன்ற ஒரு தவிர்க்க முடியாத கொடுப்பனவு அல்ல. | தேவையற்ற கிரயங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |